This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# இண்டாவது காதல் கதை

www.writersujatha.com

## 1. தொலைபேசி தொடர்பான சில சம்பவங்கள்...

**செ**ன்னை, சி.ஐ.டி. நகரில் இன்னும் தமிழார்வலர்களின் கண்களில் படாத பிஷப் வாலர் குறுக்குத் தெருவில் இருந்த கீதாஞ்சலி அபார்ட்மெண்டில் எட்டு ஃப்ளாட்தான். பாதாள கார் நிறுத்திடங்கள்... கதவைச் செல்லமாக, அளவோடு திறக்க சூர்க்கா... லேசாக மூச்சுவிடும் லிஃப்ட், மின்சாரம் போன முப்பது செகண்டில்–உயிர் பெறக்கூடிய ஜெனரேட்டர், ஒளித்து வைக்கப்பட்ட கேபிள் இணைப்பு. ப்ளாக் லேபல் விஸ்கி குடிக்கிறார்களோ, சத்யநாராயண பூஜை நடத்துகிறார்களோ... ஒருவருக்கொருவர் தொடர்பிலாது சுகதுக்கங்களை மழுப்பும் பலமான சுவர் தடுத்த தனி மாளிகைகள். அதில், நான்காவது ஃப்ளாட்டின் சொந்தக்காரர் ஆர்.ஜயந்த் (அஸ்ட்ராகாம் என்னும் மல்ட்டி மீடியா கம்பெனியின் ஸிஇஃப்ஓ.) காலை ஒன்பது மணிக்கெல்லாம் ஆபீஸ் போய்விடுபவர். ராத்திரி 'மி, மைசெல்ஃப், அண்ட் ஐரீன்' என்ற ஜிம்கேரி படம் டிவிடி–யில் பார்த்ததால் எழுந்திருக்கத் தாமதமாகிவிட்டது. விளைவாகக் காலைக்கடன்கள் தள்ளிப்போய், இறுதியில் சாக்லேட் பானத்தை முடித்துவிட்டு, ஹிண்டுவில் அவருக்கு ஒரே ஒரு சுவாரஸ்யமான விஷயமான அபிச்சுவரி படித்துவிட்டுக் கிளம்புவதற்குள் பத்தரை.

அப்போது இந்தக் கதையின் ஆரம்ப விதைச் சம்பவமாக டெலிபோன் மணி ஒலித்தது. அதை எடுத்து, "ஹலோ அகஸ்டஸ்... இப்ப வர்றேன்..." என்றார். அகஸ்டஸ்தான் போன் பண்ணுவான் என எதிர்பார்த்தார்.

சற்று அதட்டலாக, "ஹலோ..." என்றார். பதில் இல்லை. ஆனால், உயிர் இருந்தது. அந்த முனையில் யாரோ லேசான மூச்சுவிடும் சத்தமும், 'எ லிட்டில் பிட் ஆஃப் ஜெஸ்ஸிகா' பாடலில் சந்தமும் கேட்டுக்கொண்டிருக்க, மூன்றாவது அதட்டலுக்குப் பிறகு மறுமுனை செத்துப் போனது. அறைவாசலில் நிவேதா நின்று கொண்டிருந்தாள்.

"யாருப்பா...?" என்றாள். ஒருமுறை தன் மகளை அந்நியமாகப் பார்த்தபோது, 'மைகாட்... என் பெண் இவ்வளவு வளர்ந்துவிட்டாளா...?' என்ற எண்ணம் பின் மண்டையில் தட்டியது. தகப்பனாக இருந்தாலும் அவள் திரண்ட மார்பைக் கவனிக்காமல் இருக்க முடியவில்லை. அம்மாவை நிறத்திலும், நல்லவேளை அழகிலும், அப்பாவைக் குணத்திலும் கொண்டு, நின்றால் ஏறத்தாழ அஞ்சு எட்டு இருப்பவளை மாடலிங்குக்காக சத்யா பரிந்துரைக்கப் போய், அன்று வீட்டில் பெஞ்சு நாற்காலிகளெல்லாம் பறந்தன.

"யார்ப்பா போன்ல...?" என்றாள் நிதி.

"ஸம் இடியட், பேசினாத்தானே...? என் குரலைக் கேட்டப்புறம் வெச்சுட்டான்..." கலர் கலராக ஆறு மாத்திரைகளைக் கொண்டுவந்து கொடுத்த ராமலக்ஷ்மி (அவருக்கு கொலஸ்ட்ரால், டயாபடீஸ் போன்ற பெரிய மனித வியாதிகள் சகலமும் வேளாவேளைக்குப் பட்சணம் போல மாத்திரைகளும் உண்டு) "தினம் இந்த வேளைக்கு கால் வருது.